**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 453/2022 | Date | : | 05.06.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.5 | Taluk | : | |
| Name | : | கிருஷ்ணமூர்த்தி | Calling | : | |
| Father Name | : | பரமேஸ்வரன் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.06.2025

(எதிரிகள் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் தற்போது சூரம்பட்டி பாரதி வீதி எண் 38 என்ற முகவரியில் குடியிருந்து கடந்த இரண்டு வருடமாக SKT கம்பெனியில் அக்கவுண்ட்ஸ் ஆபீஸராக வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். எனது கடை முன்பு சண்டை நடந்ததாகவும், அது சம்பந்தமாக நான் கையொப்பம் செய்ய வேண்டும் என்று போலீசார் சொன்னார்கள் அதனால் நான் காவல் நிலையம் சென்று மேற்படி கையொப்பத்தை செய்தேன். தற்போது என்னிடம் கட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

கடந்த 11/03/2022–ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் இந்த வழக்கின் சம்பவ இடமான எனது கடைக்கு முன்பு போலீசார் வந்து என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளை எனக்கு தெரியும் என்றும் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.05 17:07:07 +0530

Judicial Magistrate No.III,

Erode.